சுருக்கம்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை – பாரத ரத்னா டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 15ம் நாளை “இளைஞர் எழுச்சி நாள்” ஆக கடைபிடித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (இந2) துறை

அரசாணை (நிலை) எண்.34

நாள்: 03.08.2015
ஆடி–18
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்கப்பட்டது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை, நாள் 31.07.2015.

*****

**ஆணை:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “விஞ்ஞானிகள், அறிஞர்கள், கவிஞர்கள், தத்துவ மேதைகள், ஈடு இணையில்லா தலைவர்கள் என பலரையும் இந்தியாவிற்கு தமிழன்னை வழங்கியுள்ளாள். அந்த வகையில் ‘இந்தியாவின் ஏவுகணை நாயகன்’ என்றும் ‘திருக்குறள் வழி நடந்தவர்’ என்றும் ‘இளைஞர்களின் எழுச்சி நாயகன்’ என்றும் போற்றப்படும் பன்முகத் தலைவர் ‘பாரத ரத்னா’ டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் தமிழகம் பெற்றெடுத்த தலைமகன் ஆவார்” எனத் தெரிவித்துள்ளார். இராமேஸ்வரத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் கடின உழைப்பாலும் ஒருமுக சிந்தனையாலும் விடா முயற்சியாலும் சிறந்த விஞ்ஞானியாக திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பு மக்களாலும் போற்றப்படும் குடியரசுத் தலைவராகவும் விளங்கினார்.

2. “குடியரசுத் தலைவராக இருந்த போதும் சரி, அதன் பின்னரும் சரி, அவரது சிந்தனை எப்பொழுதும் மாணாக்கர்கள், இளைஞர்கள் ஆகியோரைப் பற்றியே இருந்தது. 2020 ஆம் ஆண்டுக்குள் இந்தியா ஒரு வல்லரசு ஆக வேண்டும் என்று கனவு கண்டவர் திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள், மாணாக்கர்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரால் தான் அந்தக் கனவை நனவாக்க முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இந்தியா வல்லரசாக உருவெடுக்க, மாணாக்கர்களிடையே தன்னம்பிக்கை மிகவும் அவசியம் என்பதால் தான் மாணாக்கர்களை, ‘கனவு காணுங்கள், அந்தக் கனவு உறக்கத்தில் வரும் கனவாக இருக்கக் கூடாது. உறக்கத்தை விரட்டும் கனவாக இருக்க வேண்டும்’ என தன்னம்பிக்கையை வளர்க்கும் விதமாக எடுத்துக் கூறினார். ‘வெற்றி பெற வேண்டும் என்ற பதட்டமில்லாமல் இருப்பது தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி’ என வெற்றியின் ரகசியத்தை மாணாக்கர்களுக்கு போதித்தார்”.

3. ''டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் ஆசிரியராக இருப்பதையே பெரிதும் விரும்பினார். இளைய தலைமுறையினரையும், மாணாக்கர்களையும் தனது பேச்சினாலும், கருத்துகளாலும் கவர்ந்ததோடு மட்டுமல்லாமல் அவர்கள் வாழ்வில் உன்னத நிலையை அடைவதற்கும், இந்தியாவின் வளர்ச்சிக்கு அவர்கள் சிறந்த பங்காற்றிடவும் உந்து சக்தியாக விளங்கினார். எனவே, திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் நினைவை போற்றும் விதமாக அவரது பிறந்த தினமான அக்டோபர் மாதம் 15ம் நாள் "இளைஞர் எழுச்சி நாள்'' என தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும்'' என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15ம் நாள் "இளைஞர் எழுச்சி நாள்'' ஆக கொண்டாடப்படும் என அரசுஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹேமந்த் குமார் சின்ஹா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

அனைத்து அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
அனைத்து தலைமைச் செயலக துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள்.
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79.
(அரசிதழில் வெளியிட வேண்டி)
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
ஆளுநரின் செயலாளர், ராஜ் பவன், கிண்டி, சென்னை–25.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர்– III, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3/8/15
பிரிவு அலுவலர்
3/8/15